# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


*********

முறையீட்டு மனு எண்.472/2016/பே.1

ஆணை எண். 265 /2017/ நாள்.29–11–2017

திரு. பி.கே.தியாகராஜன்,
மாநில செயலளர்,
அனுமன் சேனா,
50, கச்சேரி வீதி,
அவிநாசி – 641 654,
திருப்பூர் மாவட்டம் — முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அவிநாசி பேரூராட்சி,
திருப்பூர் மாவட்டம் — எதிர் மனுதாரர்

## ஆணை

திரு பி.கே. தியகராஜன், மாநில செயலாளர், அனுமன் சேனா, அவிநாசி என்கிற முறையீட்டு மனுதாரரின் 11.08.2014 தேதியிட்ட முறையீட்டு மனு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண் 16857/2014/இ.2/நாள் 13.05.2016 ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் 30.03.2016 ல் பெறப்பட்டு எண் 472/2016 என பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது புகார் மனுவில் திருப்பூர் மாவட்டம், அவிநாசி பேரூராட்சியின் முன்னாள் தலைவர் திருமதி. ஜெகதம்பாள் ராஜசேகரன் மீதும் இப்பேரூராட்சியில் குடிநீர் குழாய்களை பழுது பார்க்கும் திரு நாகராஜன் என்ற தனியார் மீதும் வீட்டு குடிநீர் குழாய்கள் இணைப்புகள் வழங்குவதில் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டனர் என புகார்கள் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரருக்கு தனது முறையீட்டு மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர்(மனுதாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள் 2015, விதி 6 ல் நிர்ணயித்துள்ளவாறு ரூ. 10/–க்கான நீதி மன்ற வில்லைக் கட்டணத்துடன், உரிய படிவத்தில் ( படிவம் 1 ஐ) பூர்த்தி செய்து

அனுப்பிவைக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 472/2016/பே.1/ நாள் 02.06.2016 ன் மூலம் ஆணையிடப்பட்டது. ஆனால் இதுவரை தனது முறையீட்டு மனுவினை உரிய முறையில் முறையீட்டு மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை.

இருப்பினும் முறையீட்டு மனுதாரர் தனது புகார் குறித்து நேரடி விளக்கத்தினை பதிவு செய்ய வாய்ப்பளித்து இம்முறைமன்ற நடுவத்தில் 30.01.2017 ம் நாளன்று நேரில் ஆஜராக கோரி இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண் 472/2016/பே.1/ நாள் 07.12.2016ல் அழைப்பாணையும் அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால், முறையீட்டு மனுதாரர் மேற்படி விசாரணைக்கும் ஆஜராகவில்லை. அவ்வாறிருந்தும் கூடுதல் வாய்ப்பாக, இம்முறைமன்றத்திற்கு 11.04.2017 ல் நேரில் வர இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண் 472/2016/பே.1/ நாள் 03.03.2017ன் மூலம் ஆணையிடப்பட்டும் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை. மேலும் தான் வர இயலாமைக்கான எந்த காரணத்தினையும் தெரிவிக்கவில்லை.

இதனிடையே முறையீட்டு மனுதாரரின் புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை அனுப்பக் கோரி பேரூராட்சி செயல் அலுவலர், அவிநாசி அவர்களுக்கு இம்முறை மன்ற நடுவ அறிவிப்பாணை எண் 472/2016/பே.1/நாள் 07.12.2016ல் ஆணையிடப்பட்டது.

பேரூராட்சி செயல் அலுவலர், அவநாசி தனது ந.க.எண்.1466/2016/இ/ நாள் 28.12.2016ன் மூலம் தனது விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் புகார் மனுவின் மீதான நேரடி விளக்கங்கள்/வாக்குமூலங்களையும் இப்பேரூராட்சியில் பணிபுரிந்த சம்பந்தப்பட்ட செயல் அலுவலர்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 12.04.2017 மற்றும் 01.11.2017 ஆகிய தேதிகளில் பதிவு செய்துள்ளனர்.

குறிப்பாக இப்பேரூராட்சியில் 03.09.2013 முதல் 29.02.2016 முடிய பணிபுரிந்த முன்னாள் செயல் அலுவலர், திரு பி. மணிச்சாமி இம்முறைமன்ற நடுவத்தில் 01.11.2017 தனது வாக்குமூலத்தில் கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

".......தான் மேற்படி அவிநாசி பேரூராட்சியில் 03.09.2013 முதல் 29.02.2016 முடிய பணி புரிந்ததாகவும், மனுதாரரின் மனு குறித்த விவரங்கள் தனக்கு தெரியும் எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். பேரூராட்சி சார்பாக 1988ம் ஆண்டிற்கு பிறகு Plumber யாரும் பணி நியமனம் செய்யப்படவில்லை என தெரிவித்துள்ளார். பைப்லைன் விஷயமாக ஏற்கனவே திரு வெங்கடேஷ்வரா என்ற நிறுவனம் மூலம் பணி ஆணைகள் வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தனது வாக்கு மூலத்தில் பதிவு செய்துள்ளார். புகார் மனுதாரரான திரு நாகராஜன் என்பவர் குடிநீர் திட்டப் பணிகளுக்கான ஒப்பந்தபுள்ளிகளில் கலந்து கொள்ளவில்லை எனவும் அதனால் அவர் தேர்வு செய்யப்படவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். திரு நாகராஜன் என்பவருக்கு பணி எதுவும் கொடுக்கப்படவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். திரு குமார் என்பவர் போலியான பட்டியல்கள் தயார் செய்து தொகை வசூல் செய்தார் என்பது உண்மைக்கு புறம்பானது எனவும் தெரிவித்துள்ளார். தினமும் குடிநீர் திட்டம் குறித்து வரும் புகார்களின் அடிப்படையில் அலுவலக சுகாதாரம் மற்றும் வால்வு ஆபரேட்டர்களை

கொண்டு குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அப்பணிகளை பேரூராட்சி செயல் அலுவலர், சுகாதார ஆய்வாளர் ஆகியோர் பார்வையிட்டு பின்னர் உதவிப் பொறியாளர் அவர்களாலும் பணி மேற்பார்வையிடப்பட்டுள்ளது எனவும் தெரிவத்துள்ளார். ரூ.10,000/-க்கு மேற்பட்ட பட்டியல்கள் அனைத்தும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் மேலொப்பத்துடன் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். அவிநாசி பேரூராட்சியில் ஒப்பந்தபுள்ளி எடுப்பதில் போட்டி பொறாமை இருந்தமையாலும், போலியான குற்றச்சாட்டுகள் வருவதாலும் அவிநாசி பேரூராட்சி பணியாளர்களான சுகாதார பணியாளர்கள் மற்றும் வால்வு ஆபரேட்டர்களை கொண்டு குடிநீர் திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார். மேலும் இப்பணிகளுக்கான பொருட்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அந்த விலை விகிதத்திலேயே பொருட்கள் வாங்கப்பட்டதாகவும் எனவே இதில் எந்த விதி மீறல்களும் இல்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இவ்விளக்கங்கள் பரிசீலிக்கப்பட்டன.

விதிகளின்படி முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவினை உரிய முறையில் சமர்ப்பிக்கக் கோரி அறிவிப்பாணை அனுப்பியும், இதுவரை தனது முறையீட்டு மனுவினை உரிய முறையில் சமர்ப்பிக்காததையும், தனது புகார் மனு குறித்தான விளக்கத்தினை நேரில் பதிவு செய்திட போதுமான வாய்ப்புகள் அளித்தும் ஆஜராக தவறியுள்ளதையும் கருத்தில் கொண்டு முறையீட்டு மனுதாரர் தனது தரப்பில் விளக்கம் அளிக்க முகாந்திரம் ஏதும் இல்லை எனக் கருதி முறையீட்டு மனுதாரின் மனுவினை தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2017 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 29 – ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//-

செயலாளர். 1/12

பெறுநர்

1.திரு. பி.கே.தியாகராஜன்
அனுமன் சேனா,
50, கச்சேரி வீதி,
அவிநாசி – 641 654,
திருப்பூர் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
அவிநாசி பேரூராட்சி,
திருப்பூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை – 108

5/12/17

4/12/17